மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறளில் மனிதநேயம்

# Humanity in Thirukkural

இரா. கோபாலன்/ R. Gopalan[1]
[1] தலைமை ஆசிரியர், மாநில கல்வி நிறுவனம், போர்ட்பிளேயர், அந்தமான் நிக்கோபர் தீவுகள்
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் காணக்கிடக்கும் மனிதநேயத்தை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குறளில் காணப்படும் மனிதநேயத்தை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குறளில் மனிதநேயத்தை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குறள், மனிதநேயம்

**Abstract**

The major objective of the research is to explore humanity in Thirukkural. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the humanity in Thirukkural. The research claims to be the first such attempt to do a study regarding the humanity in Thirukkural.

**Keywords:** Humanity, Thirukkural

**முன்னுரை**

நேயம் என்ற சொல்லுக்கு அன்பு என்று பொருள். மனிதநேயம் என்ற சொல்லுக்கு மனிதர்கள் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு என்று பொருள். ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய வாழ்க்கையில், தன் குடும்பம், உற்றார், உறவினர் போன்ற தொடர்புடையவர்களோடும், தொடர்பில்லாத மற்றவர்களோடும் பழகும் வாய்ப்பு இயற்கையாகவே அமைகிறது. தொடர்புள்ள மனிதர்களோடு ஒரு மனிதன் காட்டும் அன்பையும், தொடர்பிப்பில்லாத மற்ற மனிதர்களோடு ஒரு மனிதன் காட்டும் அன்பையும், திருவள்ளுவர் அழகாகவும், விளக்கமாகவும் தெறிவாகவும் பல குறட்பாக்களில் கூறியுள்ளார். இதனை உலகிற்கு எடுத்துயியம்புவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு நெறி முறைகள்**

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

மனிதநேயக் கருத்துக்கள் அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் ஆகிய திருக்குறளின் மூன்று பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

**பண்புடையவர்களால் உலகம் வாழும்**

மனித நேயமிக்க மனிதர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் இவ்வுலகம் அழிந்து போகாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறார் வள்ளுவர்.

“பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்” (996)

என்ற திருக்குறள் மனிதப் பண்பு உடையவர்களால் மட்டுமே இவ்வுலகம் நிலை பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது.

**அருள் என்னும் மானிடமான்பு**

அருள் என்பது அன்பு பெற்றெடுத்த குழந்தை என்கிறார் வள்ளுவர். அன்பின் வழியில் தோன்றுவது அருள் என்னும் பண்பாகும்.

”நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்

தேரினும் அஃதே துணை" (242)

என்னும் வள்ளுவரின் குறள் அருள் மிக்க வாழ்வே சிறந்த வாழ்வு என்று குறிக்கின்றது. அருளோடு வாழும் வாழ்வே சிறந்த வாழ்வாகும். உலகம் பல வழிகளில் சிறப்பாக இயங்கினாலும், அருள் தேடி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு என்று மனித நேயம் மிக்க வாழ்வைச் சிறப்பிக்கிறார் வள்ளுவர்.

இக்குறளுக்குப் பல்வேறு உரைகள் எழுதப்பெற்றுள்ளன. "எல்லாச் சமயத்தாரானும் உறுதியாக விரும்பப்படுவது அருளாதலால் உயிர்க்குறுதி வேண்டினோர் அருளுடையராக வென்பது கருத்து" என இராமானுஜ கவிராயர் விளக்கம் தருகிறார். உலகில் சமயகள் பலவாக உள்ளன. ஒரு சமயம் கூறியதை இன்னொன்று மறுக்கலாம் அல்லது ஏற்கலாம். ஆயின் அனைத்து சமயங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சில கருத்துகள் ஒவ்வொரு சமயத்திலும் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் அருளுடைமையாகிய மனிதநேயம். உன் உயிரைப் போல, பிற உயிரையும் நேசி என்ற அருள் சார்ந்த கருத்தை அதாவது மனிதநேயக் கருத்தை அனைத்துச் சமயங்களும் ஏற்று நிற்கின்றன. இவ்வாறு சமயம் சார்ந்த மனிதநேயத்திற்கும் இக்குறள் பொருந்துவதாக உள்ளது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (45)

ஒருவன், அன்போடும் அறத்தோடும் ஒல்வாழ்க்கை நடத்தும்பொழுது, அவனோடு தொடர்புடைய மனைவி, மக்கள், பெற்றோர் மற்றும் உறவினர் (ஒக்கல்) ஆகியோருக்கு, அவன் உற்ற துணையாகவும் ஆதரவாகவும் இருந்து அன்பு செருத்த வேண்டும் என்ற கருத்தையும் நாம் திருக்குறளில் காண்கிறோம். ஆகவே, தொடர்புடைய அனைவரிடமும் ஒருவன் அன்பாக இருக்க வேண்டும் என்பது திருக்குறளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (41)

"தென்புலத்தார் தெய்வம், விருந்துஒக்கல் தான்என்றுஆங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை" (43)

தன்னுடைய குடியை மேன்மேலும் முன்னேற்றும் முயற்சியைக் கைவிடேன் என்னும் பெருமையைப்போல சிறந்த பெருமையைப் போல சிறந்த பெருமை ஒருவனுக்கு வேறு ஒன்றுமில்லை என்று வள்ளவர் கூறுவது. ஒருவனுக்குத் தன் குடும்பத்தின் மீதுள்ள மனிதநேயத்தின் சிறப்பையும் அதன் பெருமையையும் குறிக்கிறது.

### நெருங்கிய தொடர்பில்லாதவர்களிடம் காட்டும் அன்பு

முதலில் தொடர்பில்லாமலிருந்தாலும், காலப்போக்கில் ஒருவன் சிலரோடு நட்பு கொள்கிறான். நட்பு கொண்ட பிறகு, அவனுக்கும் அவனுடைய நண்பர்களுக்குமிடையே உள்ள உறவு நெருக்கமாகிறது. அந்த நட்பினால், நண்பர்கள் எவ்விதத் தயக்கமும் இல்லாமல், தன்னுடைய ஆடை நழுவினால், அதை ஒருவன் உடனே

சரிசெய்துகொள்வதைப் போல் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தை, வள்ளுவர்.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (788)

என்ற குறளில் கூறுகிறார். இவ்வாறு உதவி செய்வதும் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டுதான்.

வள்ளுவர் காலத்திற்கு முன்பும், அவர் காலத்திலும் துறவிகளுக்கு உணவளிப்பது இல்வாழ்க்கையில் இருப்பவர்களின் கடமையாகக் கருதப்பட்டது. உடல் ஊனமுற்றதால் அல்லது வறுமையால் வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் வருந்தியவர்கள் துவ்வாதவர் என்று அழைக்கப்பட்டனர். துறவிகளுக்கும், துவ்வாதார்க்கும், வாழ்க்கைப் பாதையில் வழிதவறியவர்களுக்கும் (இறந்தார்க்கும்), இலவாழ்க்கையில் இருப்பவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது தொடர்பில்லாதவர்களிடத்தும் ஒருவன் மனிதநேயத்தோடு வாழ வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை" (42)

இக்காலத்தில் இருப்பதுபோல், திருவள்ளுவர் காலத்தில் நாடெங்கிலும் விடுதிகள் இல்லாததால், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்பவர்களுக்குத் தன் வீட்டில், உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து ஆதரிப்பது இல்வாழ்க்கையில் இருப்பவனின் கடமையாகக் கருதப்பட்டது. இவ்வாறு தொடர்பில்லாதவர்களை ஆதரிப்பது விருந்தோம்பல் என்று அழைக்கப்பட்டது. இல்வாழ்க்கை நெறிநின்று வாழ்வதின் நோக்கம் விருந்தோம்பல் என்று வள்ளுவர் கூறுவது திருக்குறளில் உள்ள மனிதநேயத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மக்கள் அனைவரும் பிறப்பினால் சமம் என்றும், பிறர் துன்பத்தை தன் துன்பமாகக் கருதுவதுதான் ஒருவன் அறிவினால் பெற்ற பயன் என்றும் வள்ளுவர் கூறுவது திருக்குறளில் காணப்படும் மனிதநேயத்திற்கு மற்றுமொரு சான்று.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (972)

"ஆறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை" (315)

மக்கள் அனைவரும் சமம் என்று உணர்வதும், மற்றவர்கள் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதுவதும் உயர்ந்த மனிதநேயக் கோட்பாடுகள்தான். ஆனால், அந்தக் கோட்பாடுகள்தான். ஆனால், அந்தக் கோட்டுபாடுகளை உள்ளத்தால் உணர்வதுதோடு நிறுத்திக்கொள்ளாமல், அவற்றைச் செயலிலும் காட்ட வேண்டும் என்றும், தன்னிடம் உள்ள உணவு, செல்வம் ஆகியவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதுதான் தலையாய செயல் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" (322)

நாம் பிறருக்கு உதவி செய்வதை வள்ளவர் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, வறுமையில் வாடுபவர்கள் நம்மிடம் வந்து கேட்கும்பொழுது இல்லையென்று கூறாமல், நம்மால் இயன்றதைப் பிறருக்கு அளித்து உதவுவதை வள்ளுவர் ஈகை என்று கூறுகிறார். வறியவர்களுக்குத் தேவையானவற்றை, அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல் நாம் கொடுத்து உதவுவதுதான் உண்மையான ஈகை என்ற கருத்தும் திருக்குறளில் காணப்படுகிறது.

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" (221)

வறுமையில் உள்ளவர்களின் நிலையை உணர்ந்து, அவர்கள் வந்து கேட்காமலேயே, அவர்களுக்குப் பலவகைகளிலும் உதவி செய்வது ஒப்புரவு. மற்றவர்களும் உதவி செய்வது ஒப்புரவு. மற்றவர்களும் தன்னைப் போன்றவர்கள்தான் என்பதை உணர்ந்தவன்தான் உயிரோடு வாழ்பவன் என்றும் அவ்வாறு உணராதவன் செத்தவன் என்றும், ஒருவன் பாடுபட்டுத் தேடிய பொருளெல்லாம் தகுதி உடையவர்களுக்குக் கொடுத்து உதவுவதற்குத்தான் என்றும் ஒப்புரவைப் பற்றிய வள்ளுவரின் கருத்துக்கள் திருக்குறளில் காணப்படும் ஒப்புயர்வற்ற மனிதநேயக் கருத்துக்களாகும்.

**மன்னனின் மனிதநேயப் பண்புகள்**

தனிமனிதன் மட்டுமல்லாமல், நாட்டை ஆளும் மன்னனும் மனிதநேயத்தோடு செயல்பட வேண்டும் என்று திருக்குறள் வலியுறுத்துகிறது. மன்னன் காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் கூறாதவனாகவும் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். மற்றும், மன்னன் நீதி தவறாது, முறைசெய்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தும், மன்னன் கொடை, அன்பு, செங்கோல் செலுத்துதல், குடிகளைக் காப்பாற்றுதல் ஆகிய பண்புகளை உடையவனாக இருக்க வேண்டும் என்ற மனிதநேயக் கருத்துக்களையும் திருக்குறளில் காணலாம். குடிமக்களை அரவணைத்துத் தழுவி வாழும் மன்னனே சிறந்தவன் என்றும், மழைத்துளி இல்லையென்றால் எப்படி உலகம் வாழாதோ அதுபோல் மன்னனின் அருளாட்சி இல்லையென்றால் மக்கள் வாழ முடியாது என்றும் வள்ளுவர் கூறுவது மன்னனுக்கு மனிதநேயத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (386)

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (388)

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தற்கு ஒலி" (390)

"துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு" (557)

மன்னனுக்கு மக்கள்மீது மனிதநேயம் இருக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுவது மன்னனுக்கு மட்டுமல்லாமல் இக்காலத்தில் ஆட்சியில் இருக்கும் அனைவருக்கும், நிருவனங்களின் தலைவர்களுக்கும் பொருந்தும்.

அன்பில்லாத மனிதன் உயிரில்லாதவன் என்றும் அவன் வெறும் எலும்பும் தோலும் சேர்ந்த உடம்பு மட்டுமே என்றும் வள்ளுவர் கூறுகிறார் (குறள் - 80). ஆகவே, அன்பில்லாத மனிதனே இல்லை. அன்புதான் மனிதநேயத்தின் அடித்தளம். அதனால், ஒவ்வொருவரும், அன்பை வளர்த்து, மக்கள் அனைவரும் சமம் என்ற எண்ணத்தோடு, அனைவரிடமும் இன்சொல்பேசி, விருந்தோம்பி, அடக்கத்தோடும், ஒழுக்கத்தோடும் பழகி, பொறுமையைப் பேணிக்காத்து, அழுக்காறு இல்லாமல், பிறர் பொருளைக் கவரும் எண்ணம் இல்லாமல், பயனில சொல்லாமல், புறங்கூறாமல், தீவினைகளை விலக்கி, ஈகையும் ஒப்புரவும் செய்து, வாய்மையே பேசி, சினத்தைத் தவிர்த்து, இன்னாசெய்தார்க்கு அவர் நாணுமாறு நன்னயம் செய்து (குறள்-314). பிறர் நலத்தைத் தன்னலம்போல் கருதி, எனைத்தானாம் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம் மாணா செய்யாமல் அன்போடு வாழ்வதுதான் (குறள்-317) திருக்குறள் கூறும் மனிதநேயம் என்னும் தலைசிறந்த பண்பு. இத்தகைய மனிதநேயத்தோடு வாழ்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இய்ங்குகிறது என்றும், மனிதநேயம் உள்ளவர்கள் இல்லையென்றால், இவ்வுலகம் மண்ணுக்குள் மறைந்து அழிந்துவிடும் என்றும் வள்ளுவர்.

"பண்புடையர்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (குறள்-996)

என்ற குறளில் கூறி. மனிதநேயத்தின் சிறப்பையும் அதன் இன்றியமையாமையையும் வலியுறுத்துகிறார். மனிதநேயத்தால்தான் உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதில் பாண்டிய மன்னன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் கருத்தும் வள்ளுவர் கருத்தும் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரை**

அனைத்து உயிர்களிடத்தும் இரக்கம் காட்ட வேண்டும். அன்பும், அருளும், மனிதநேயமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை முடிந்தவரை மனிதநேயம் கொண்டு வாழ்வதே நல்ல நெறி இக்கருத்துகளை திருவள்ளுவர் தனது நூலில் தெளிவாக கூறுகிறார். அறம் போல் அறிவு இருப்பினும் மனித நேயம் இல்லாதவர்களை வள்ளுவர் மரம் என்கிறார். தற்காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி உச்சத்தைத் தொட்டிருப்பினும், மானுட உறவில் பின் தங்கியிருப்பதை பக்கத்து வீட்டின் கருத்து முரண் நினைவுபடுத்துகிறது. வள்ளுவர் விருந்துக்கும் இலக்கணம் வகுத்துள்ளார். முன்பின் அறிமுகம் இல்லாதோரே விருந்தினர் என்ற கருத்து எவ்வளவு பெரிய புரட்சி சிந்தனை என்பதனை நம்மால் உணரமுடிகிறது. இவற்றிலிருந்து மனித நேயத்தின் பிறப்பிடமாக வள்ளுவம் விளங்குவதை உலகிற்கு எடுத்தியம்பும் வண்ணம் உள்ளது. வள்ளுவ நேயத்தை வணங்கி உலகிற்கு எடுத்தியம்புவதில் மகிழ்கிறேன்.

## துணைநூற்பட்டியல்


இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.

மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை

விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.

திருவாசகம் விளக்கியவர் ஶ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஶ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு

தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971.

தேவநேயப் பாவாணர், ஞா. திருக்குறள் – தமிழ் மரபுரை, ஶ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை